<u>**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**</u>

<u>**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**</u>

<u>**MCOP .No.99/2023**</u>

<u>**நாள் : 25.11.2025**</u>

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசன் | மாவட்டம் | : | வேலூர் |
| தந்தை பெயர் | : | திரு.சின்ன எல்லன் | வயது | : | 53 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | பேர்ணாம்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த வகையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 2ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1) TN 02 AE 5445 என்ற மாருதி ஆல்டோ காரின் பதிவுச்சான்று நகல் எ.ம.சா.ஆ.1

2) மேற்படி மாருதி ஆல்டோ காரின் இன்சூரன்ஸ் பாலிசி நகல் எ.ம.சா.ஆ.2

3) 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் எ.ம.சா.ஆ.3

4) குற்ற வழககில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி வரைபடம் நகல் எ.ம.சா.ஆ.4

5) TN 02 AE 5445 என்ற மாருதி ஆல்டோ காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.5

6) TN 83 X 5301 என்ற Honda Activa இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை நகல் எ.ம.சா.ஆ.6

7) 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவன புலன் விசாரணை அறிக்கை எ.ம.சா.ஆ.7

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு பற்றிய விவரங்கள் ஆவண ரீதியாகத்தான் தெரியும் என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட 1ஆம் எதிர்மனுதாரக்கு சொந்தமான TN 02 AE 5445 என்ற மாருதி ஆல்டோ காரானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக விபத்து சம்பந்தமாக ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண்.297/2023ன் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஊத்தங்கரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுததியுள்ளார் என்றால் சரிதான். ஆல்டோ காரின் ஓட்டுநரது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தால் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு 3ஆம் தரப்பினர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.2/ம.சா.ஆ.5 இன்சூரன்ஸ் பாலிசியில் 12.01.2023 14.54 மணி முதல் 11.01.2024 இரவு 12.00 மணி வரை அமலில் இருந்தது என்றால் சரிதான். தகுதிச்சான்றை சரிபார்த்து பாலிசி வழங்கப்பட்டதா என்றால் இல்லை. ஒரு வாகனத்திற்கு சட்டப்படி வைக்கவேண்டிய ஆவணங்களான தகுதிச்சான்று இல்லாதபட்சத்தில் இன்சூரன்ஸ் வழங்கியிருக்கக்கூடாது என்றால் சரியல்ல, பாலிசி வழங்கப்பட்ட தேதியில் தகுதிச்சான்று இருந்தது. ஆனால் பாலிசி முடிவு தேதியான 11.01.2024ஆம் தேதிக்கு 5 நாட்களுக்கு முன்பாகத்தான் தகுதிச்சான்று காலாவதியாகிவிட்டது. அந்த வகையில் அதை புதுப்பிக்கவேண்டிய கடமை 1ஆம் எதிர்மனுதாரருக்குத்தான் உண்டு. 1ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசியானது 11.05.2023ஆம் தேதியிலேயே காலாவதியாகிவிட்டதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆல்டோ காரின் பாலிசியானது 11.05.2023லேயே முடிவடைந்த நிலையில் அந்த தேதி வரைதான் பாலிசி கொடுத்திருக்கவேண்டும் என்றும், அவ்வாறு இல்லாமல் அதனை தாண்டி பாலிசி வழங்கப்பட்டதால் எங்களது நிறுவனமானது இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.